**சுருக்கம்**

வரவு - செலவு – உணவு நிலுவை பட்டியல் – அரசு மருத்துவமனைகளில் உள்நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவுக்கு கூடுதல் நிதி கோரியது – முதலமைச்சரின் காப்பீட்டு திட்ட நிதியிலிருந்து ஒரு அவசர கால நிகழ்வாக ஒரு முறை மட்டும் நேர்வு செய்ய அனுமதி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்–2) துறை**

அரசு ஆணை (வாலாயம்) எண்.01

நாள் 02.01.2015
திருவள்ளுவர் ஆண்டு 2045
ஜய– மார்கழி –18

**படிக்க:**

1) அரசு ஆணை எண்.914, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள் 04.06.2009.
2) அரசு கடித எண்.3351/எஸ்2/2014–5, நாள் 21.07.2014.
3) மருத்துவக் கல்வி இயக்குநர் கடித ந.க.எண். 39613/கபி2/1/ 2013, நாள் 01.09.2014.

----

**ஆணை:**

மருத்துவக் கல்வி இயக்குநர், பார்வை மூன்றில் படிக்கப்பட்ட தனது கடிதத்தில் அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் உள்நோயாளிகளுக்கு புதிய உணவு முறையில் அரசின் கொள்கைகேற்ப உணவு வழங்கப்பட்டு வருகிறது என்றும், உணவு பொருட்கள் கீழ்காணும் இனங்களாக பிரிக்கப்பட்டு கொள்முதல் செய்யப்படுகிறது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

| வ. எண் | உணவுப் பொருளின் வகை | கொள்முதல் செய்யப்படும் முறை |
|---|---|---|
| 1) | அழுகக்கூடிய பொருட்கள் ( Perishable Commodities) | திறந்தவெளி ஒப்பந்தம் |
| 2) | அழுகாதபொருட்கள் ( Provisions) | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் |
| 3) | பால் (Milk) | தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் அமைப்பு |

2. மருத்துவக் கல்வி இயக்குநர், மேலும், அவ்வப்போது விலைவாசி ஏற்றத்தினால் புதிய உணவு வழங்கல் முறையினை அரசு ஊக்குவித்துள்ளதாலும் பொதுவாக இவ்வினங்களில் நிதி அரசிடமிருந்து கோரப்படும் நிலை ஏற்படுகிறது என்றும், உள்நோயாளிகளின் எண்ணிக்கை ஆண்டிற்கு ஆண்டு அதிகரித்துள்ளதாலும், தேவையான உணவு வழங்கும் பொருட்டு உணவு பொருட்களின் கொள்முதல் அதிகரித்துள்ளது. மேலும், மருத்துவக் கல்வி இயக்ககக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் அரசு மருத்துவமனைகளில் உள்நோயாளிகள் தங்கி சிகிச்சை பெற்றுவந்துள்ளனர். அவர்களுக்கு கட்டாயமாக உணவு வழங்குவது என்பது அரசின் கொள்கையாகும். எனவே, கடந்த 2013–2014–ஆம் ஆண்டு (31.03.2014 முடிய) நிலுவை பட்டியல்கள் தீர்வு செய்ய ரூ.3,72,92,683/– (ரூபாய் மூன்று கோடியே எழுபத்துரெண்டு லட்சத்து தொண்ணுாற்று இரண்டாயிரத்து அறுநூற்று எண்பத்தி மூன்று மட்டும்) கூடுதல் நிதி தேவையென குறிப்பிட்டுள்ளார்.

3. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசு கூட்ட நடவடிக்கை குறிப்பில் (Minutes of the meeting) நிலுவையாக உள்ள உணவு பட்டியல்களை முதலமைச்சரின் காப்பீட்டு திட்ட

நிதியிலிருந்து தீர்வு செய்யலாம் என்பது அரசால் கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்கள்.

4. மேற்குறிப்பிட்ட உணவு நிலுவைப்பட்டில்களுக்கான தொகையான ரூ.3,72,92,683/– (ரூபாய் மூன்று கோடியே எழுபத்துரெண்டு லட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரத்து அறுநூற்று எண்பத்தி மூன்று மட்டும்) முதலமைச்சர் காப்பீட்டு திட்ட நிதியிலிருந்து நேர்வு செய்ய ஆணை வழங்க கேட்டுக்கொண்டுள்ளார்.

5. மருத்துவக் கல்வி இயக்குநர் கருத்துருவை அரசு பரிசீலனை செய்து அதனை ஏற்கலாம் என தீர்மானித்துள்ளது.

6. மருத்துவக் கல்வி இயக்குநர் கட்டுப்பாட்டில் உள்ள இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 19 அரசு மருத்துவக் கல்லூரி நிலையங்களில் 01.04.2013 முதல் 31.03.2014 வரை நிலுவையில் உள்ள ரூ.3,72,92,683/– (ரூபாய் மூன்று கோடியே எழுபத்துரெண்டு லட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரத்து அறுநூற்று எண்பத்தி மூன்று மட்டும்) உணவு பட்டியல்களை முதலமைச்சரின் காப்பீட்டு திட்ட நிதியிலிருந்து ஒரு அவசர கால நிகழ்வாக நேர்வு செய்ய ஒருமுறை மட்டும் அனுமதித்து அரசு ஆணையிடுகிறது.

7. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலை அதன் அ.சா.எண்.4326/நி.செ(பொறுப்பு)/ நாள் 31.10.2014–ல் பெற்று வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஜெ.ராதாகிருஷ்ணன்,**
**அரசு செயலாளர்**

பெறுநர்
மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை–600 010.
சம்பளக்கணக்கு அலுவலர் (தெற்கு) சென்னை–600 018.
**நகல்:**
நிதி (சுகாதாரம்–1 மற்றும் 2) துறை , சென்னை–600 009.
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
குழும இயக்குநர், மாநில நலவாழ்வு சங்கம், சென்னை–600 006,
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (தரவு களம்) துறை, சென்னை–600 009.
இ.கோ/ உதிரி.

**/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /**

பிரிவு அலுவலர்
5.1.15

## இணைப்பு – I

**அரசாணை(வாலாயம்) எண்.01, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள்02.01.2015**

**67– உணவுத் தலைப்பின் கீழ் 01.04.2013 முதல் 31.03.2014 முடிய நிலுவைப் பட்டியல்களின் விவரம்**

| வ.எண். | மருத்துவ நிலையத்தின் பெயர் | பால் | ரொட்டி | அழுகும் பொருட்கள் | அழுகாத பொருட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை, சென்னை. | – | – | ரூ.40,36,775/– | ரூ.2,84,982/– | ரூ.43,21,757/– |
| 2. | அரசு கண் மருத்துவமனை, சென்னை. | – | – | – | ரூ.4,60,125/– | ரூ.4,60,125/– |
| 3. | அரசு புறநகர் மருத்துவமனை, கே.கே.நகர்., சென்னை. | ரூ.2,86,459/– | – | – | – | ரூ.2,86,459/– |
| 4. | மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனை, திருச்சி | ரூ.13,00,815/– | ரூ.70,479/– | ரூ.1,67,687/– | ரூ.3,04,215/– | ரூ.18,43,196/– |
| 5. | விழுப்புரம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, விழுப்புரம். | – | ரூ.37,922/– | ரூ.18,73,603/– | ரூ.26,76,009/– | ரூ.45,87,534/– |
| 6. | திருவாரூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருவாரூர். | ரூ.8,91,000/– | ரூ.1,93,070/– | ரூ.2,51,758/– | ரூ.8,68,713/– | ரூ.22,04,541/– |
| 7. | தருமபுரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தருமபுரி. | ரூ.12,68,458/– | ரூ.5,65,755/– | ரூ.3,02,691/– | ரூ.24,43,649/– | ரூ.45,80,553/– |
| 8. | ராஜாஜி மருத்துவமனை, மதுரை. | ரூ.11,20,787/– | ரூ.24,69,206/– | ரூ.28,13,541/– | ரூ.4,73,301/– | ரூ.68,76,835/– |
| 9. | சிவகங்கை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சிவகங்கை. | ரூ.1,09,518/– | ரூ,3,90,129/– | ரூ.4,02,813/– | ரூ.4,29,289/– | ரூ.13,31,749/– |
| 10. | திருவண்ணாமலை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருவண்ணாமலை. | ரூ.2,41,016/– | ரூ.21,049/– | ரூ.98,699/– | ரூ.1,64,554/– | ரூ.5,25,318/– |
| 11. | கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோவை. | ரூ.27,15,998/– | ரூ.2,43,196/– | ரூ.2,72,642/– | – | ரூ.32,31,836/– |
| 12. | தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தூத்துக்குடி | ரூ.1,49,999/– | ரூ.2,37,300/– | ரூ.5,19,887/– | ரூ.2,39,848/– | ரூ.11,47,034/– |
| 13. | கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கன்னியாகுமரி. | ரூ.7,99,449/– | ரூ.92,700/– | ரூ.7,20,909/– | ரூ.7,97,054/– | ரூ.24,10,112/– |
| 14. | அரசு அறிஞர் அண்ணா நினைவு மருத்துவமனை, காஞ்சிபுரம் | ரூ.1,65,078/– | ரூ.34,052/– | ரூ.67,802/– | ரூ.70,108/– | ரூ.3,37,040/– |
| 15. | தேனி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தேனி. | – | – | ரூ.19,892/– | – | ரூ.19,892/– |
| 16. | அரசு நெஞ்சகநோய் மருத்துவமனை, ஓட்டேரி. | – | – | ரூ.4,18,951/– | – | ரூ.4,18,951/– |
| 17. | தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர். | ரூ.3,53,100/– | ரூ.3,04,383/– | ரூ.1,83,476/– | ரூ.1,25,649/– | ரூ.9,66,608/– |
| 18. | அரசு தாய் சேய் நல மருத்துவமனை, சென்னை. | – | – | ரூ.12,96,407/– | – | ரூ.12,96,407/– |
| 19. | அரசு மோகன் குமாரமங்களம் மருத்துவமனை, சேலம். | – | – | – | ரூ.4,46,736/– | ரூ.4,46,736/– |
| | மொத்தம். | ரூ.94,01,677/– | ரூ.46,59,241/– | ரூ.1,34,47,533/– | ரூ.97,84,232/– | ரூ.3,72,92,683/– |

**(ரூபாய் மூன்று கோடியே எழுபத்து இரண்டு இலட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரத்து அறுநூற்று எண்பத்து மூன்று மட்டும்)**

ஜெ.ராதாகிருஷ்ணன்
அரசு செயலாளர்

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்

5.1.15